# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2301/58 - 2022 ඔක්තෝබර් මස 14 වැනි සිකුරාදා - 2022.10.14

*2301/58 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 45 (4) ஆவது பிரிவின் பிரகாரம், அரசியலமைப்பின் 44(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர்களுக்கு விடயங்கள் மற்றும் அலுவல்களைப் பொறுப்பளித்தல் உடனடியாக அமுலாகும் வண்ணம் இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இடம்பெறும் என இதன் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**கலாநிதி பந்துல குணவர்தன,**
வெகுசன ஊடக அமைச்சர்.

வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு 05,
2022, ஒற்றோபர் 14.


1A - G 37785 — 08 (2022/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**கௌரவ சாந்த பண்டார, இராஜாங்க அமைச்சர்**

| *செயற்பாடுகள் மற்றும் பணிகள்* | *திணைக்களம், சட்டபூர்வ அமைப்புகள் மற்றும் அரச நிறுவனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
|---|---|---|
| 1. அரசினால் செயற்படுத்தப்படுகின்ற தேசிய கொள்கைகள் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ள வெகுசன ஊடக விடயத்திற்கும் மற்றும் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள திணைக்களம் மற்றும் சட்டபூர்வ அமைப்புகள் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான கொள்கை, நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களை செயற்படுத்துதல் பின்னணி வழங்குதல் மற்றும் மதிப்பாய்வு செய்தல்.<br><br>2. இந்த வர்த்தமானி அறிக்கையின் மூலம் பொறுப்பளிக்கப்படுகின்ற வெகுசன ஊடக அமைச்சின் விடயத்திற்கு உரியதான பொதுமக்கள் சேவைகளை வினைத்திறனுடன் மற்றும் பொது மக்கள் நட்புரீதியில் வழங்குதல்.<br><br>3. விரயம் மற்றும் ஊழல்களை ஒழித்து அமைச்சின் பணிகளை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் புதிய முகாமைத்துவ முறைமை மற்றும் தொழில் நுட்பத்தினை இணைத்துக் கொண்டு அனைத்து முறைகள் மற்றும் விதிகளை மறுசீரமைத்தல்.<br><br>4. மக்களின் அறிவு, சிந்தனை மற்றும் இரசனைகளை மேம்படுத்தி பொருளாதார, சமூகம், கலாசாரத்தின் முன்னேற்றத்திற்காக வெகுசன ஊடகத்தின் பங்களிப்பினை வழங்குவதற்காக தேவையான வழிமுறைகளை வழங்குதல்.<br><br>5. அரசாங்க அச்சக வெளியீட்டு நடவடிக்கைகள்.<br><br>6. புதிய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ வழிமுறைகளைப் பிரயோகித்து பன்முகத் தன்மையுடன் வணிகத்தினை நோக்காய்க் கொண்ட புதிய தபாலர் சேவையினை வழங்குதல் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு தபால் சேவைகளை பராமரித்தல். | 1. தபால் திணைக்களம்<br>2. அரசாங்க அச்சுத் திணைக்களம்<br>3. இலங்கை அச்சக நிறுவனம் | • முத்திரைக் கட்டளைச் சட்டம் (1909 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கம்)<br><br>• தபால் திணைக்களக் கட்டளைகள் சட்டம் (1908 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கம்)<br><br>• இலங்கை அச்சக நிறுவனச் சட்டம் (1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கம்) |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**கௌரவ சாந்த பண்டார, இராஜாங்க அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *செயற்பாடுகள் மற்றும் பணிகள்* | *திணைக்களம், சட்டபூர்வ அமைப்புகள் மற்றும் அரச நிறுவனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
|---|---|---|
| 7. இலங்கை முத்திரைப் பணியகத்தினை நிர்வகித்தல் | | |
| 8. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களுக்குமான நடவடிக்கைகள் | | |
| 9. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல். | | |

EOG *10 - 0129*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.